முதுகலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு

பாடம் - சங்க இலக்கியம் - II

நெடுநல்வாடை

பாடக்குறியீடு - P16TA32

# நெடுநல்வாடை

ஆசிரியர் - நக்கீரர்

திணை - வாகை திணை

துறை - கூதிர்ப்பாசறை

## நெடுநல்வாடை பெயர் விளக்கம்

தலைவி - தலைவிக்கு நெடுநாள்வாடையாக காணப்பட்டது

தலைவன் - போர்களத்தில் உள்ள தலைவனுக்கு நெடுநல்வாடையாக இருந்தது.

## நூல்

இந்த நூல் சங்க இலக்கியத்தில் அகப்புற இலக்கியமாக வைக்கப்பட்டுள்ளது காரணம்

"வேம்பு தலை யாத்த நோன் காழ் எஃகமொடு" என்ற பாடல் வரி பாண்டிய மன்னனின் பூவினை குறிப்பதால் இது அகத்திணை இலக்கியம் ஆகாது என கூறியுள்ளனர். அதனால் இந்த இலக்கியம் அகப்புற இலக்கியமாக வழங்கப்படுகிறது

## பெரும்பனி வாடை - கோவலர் நடுங்கல்

உலகம் குளிரில் நடுங்கும்படி மழை பொழிந்து கொண்டிருக்கிறது.

கோவலர்கள் தம் ஆனிரைகளை வேறு நிலப்பரப்பில் மேய்விட்டுகொண்டு புலம்புகின்றனர்.

அவர்கள் தலையில் வெண்காந்தள் பூவினை சூடிகொண்டு உள்ளனர்

பனியோடு சேர்ந்து வாடைகாற்றும் வீசுகிறது

## விலங்குகளின் நிலை

வாடைக்காற்றின் மழையினால் பசுக்கள் புற்களை மேயவில்லை
மரத்தில் மந்தி குரங்குகள் குளிரிய நிலையில் அமர்ந்துகொண்டு இருக்கின்றன
பறவைகள் பறக்காமல் தரைக்கீழாக நிலத்தில் விழுகின்றன
கன்றுக்குட்டிகள் தாய் மடியில் பால் குடிக்கவில்லை
இப்படி கடுமையான மழை பொழிகிறது

## நாட்டின் செழிப்பு

முசுண்டைக் கொடி முசுண்டைக் கொடியில் வெண்ணிற பூக்கள் பூத்து கிடக்கின்றன
பீர்க்கம் பூ பொன் நிறத்தில் பூத்துக் கிடக்கிறது
ஈர மணலில் கொக்குகள், நாரைகள் அமர்ந்து வரும் ஆற்று வெள்ளத்தில் கயல் மீன்களை பிடிப்பதற்காக நின்று கொண்டு இருந்தன
வயலில் நெற்கதிர்கள் நன்றாக விளைந்து வளைந்து தொங்கியது
பாக்கு மரத்தில் காய்கள் நன்றாக சதைப் பிடிப்புடன் முற்றித் தொங்குகின்றன.
காட்டில் இருக்கும் மரங்களின் இலைகளில் மழைத்துளிகள் இருந்தன

## ஊர் மக்களின் நிலை

பழமையான ஊர்
வளமான ஊர்
அனைத்து இடங்களிலும் உயரிய மடமாளிகைகள் காணப்பட்டன
ஆறு போன்று அகன்ற தெருக்கள் காணப்பட்டன
முழு வலிமையான முறுக்கான உடல் கொண்ட மக்கள் இருந்தனர்.
மாலையினை அணிந்திருந்தனர். அதிகமான தேறலை அருந்தி இருந்தனர்
அதனை குடித்து விட்டு தெருவில் நடமாடி கொண்டு இருந்தனர்
பகல் பொழுது போல் இரவிலும் எங்கும் வேண்டுமானாலும் சென்றனர்.

## அரசியின் அரண்மனை வகுத்த முறை

அரசியின் மனை அரண்மனைக்கு ஒப்பாக அமைக்கப்பட்டு இருந்தது.
கட்டடக்கலையில் தேர்ச்சி பெற்ற கலைஞன் அரசிக்கு மனை வகுத்தான்
தெய்வத்தை வாழ்த்தி மனையை வகுத்துக் கட்டினான்.

## அரசியின் அரண்மனை நிலைவாயில்

வளைந்த முகடுகளை உடைய அரண்மனை
யானையானது தன் வெற்றிக் கொடியுடன் புகும் அளவுக்கு உயர்ந்த நிலைவாயில்.
குன்றினை குடைந்தது போல் நிலைவாயில் அதில் இரட்டைக் கதவு அமைக்கப்பட்டு இருந்தது. கதவைத் தாங்கும் இரும்பு ஆணி. அரக்கு சேர்த்துப் பிணித்த மரக்கதவு.
அதற்கு உத்தரம் என்ற பெயர் கொண்ட நாள்மீனின் நிலை நிலையில் குவளைப் பூவின் மொட்டு போல் கலைத்திற வேலைப்பாடுகள். கதவுக்கு தாழ்ப்பாள் கதவை திறக்கும் இரும்பு அணியும் எளிதாக இயங்கும் பொருட்டு ஐயவி என்னும் வெண்சிறு கடுகு எண்ணெய் பூச்சி போடப்பட்டு இருந்தது.
இப்படி அந்த வாயில் அமைக்கப்பட்டு இருந்தது.

## திருமனை முற்றம்

அரசி அரண்மனைக்குத் 'திருநகர்' என்று பெயர்
அதன் முன்புறமும் பின்புறமும் முற்றம்
வெளியிலிருந்து கொண்டுவரப்பட்ட மணல் பரப்பட்டுள்ள முற்றம்.
அதில் வெண்ணிற எகினமும். அன்னமும் கவரி விளையாடிக் கொண்டிருந்தன.

## அரண்மனைக் கோயிலில் எழும் ஓசைகள்

கடலைக் கிடப்பதை விடும்போது திரைகள் பலகணை தெவிட்டும் பலகையில் ஒலி கேட்டுக்கொண்டு இருந்தது.

மேலா இறந்தத்தில் மகரத்தின் வாயிலிருந்து நீர் விழுவது போல் அமைக்கப்பட்டிருந்த சிறுபுரிப் பகுவாய். அதன் வழியாக 'அம்பணம்' என்னும் தொட்டியில் விழும் அருவி நீரின் ஒலி கேட்டுக்கொண்டு இருந்தது. இப்படிப்பட்ட ஓசைகள் அந்த அரண்மனை கோயிலில் கேட்டுக்கொண்டு இருந்தது.

## அரசியின் கருவறை தோற்றம் :-

அரசியின் கருவறையில் பாவை விளக்கு எரிந்துகொண்டு இருந்தது. அந்த பாவை விளக்கு யவனர் கலைஞர்களால் செய்யப்பட்டது. ஐந்து திரிமுனைகளை கொண்டு பருமனான திரியிடப்பட்டு அது எரிந்துகொண்டிருந்தது. அது ஒளி மங்கும் போதெல்லாம் எண்ணெய் ஊற்றித் தூண்டப்பட்டது. அங்கே பல்வேறு பதக்கைகள் இருந்தன. அதற்குள் அரசன் தவிர வேறு எந்த ஆண் மகனும் செல்வதில்லை. அது மலை போல் தோன்றும் மனை. அதில் மலைமேல் வானவில் கிடப்பது போல் துணிக்கொடிகள் பறந்துகொண்டு இருந்தன.

அது வெள்ளி சுண்ணாம்பு அடிக்கப்பட்ட வெள்ளை மாளிகை சுவர் செம்பால் செய்யப்பட்டது போல் இருந்தது.

அதில் வளைந்த வளைந்து கொடி படர்வது போல் மணிகள் பதிக்கப் பட்டிருந்தன.

அந்த மனைக்குக் கருவறை என்று பெயர்.

## அரசி படுத்திருக்கும் கட்டிலின் தோற்றம் :-

அரசியின் கட்டிலின் கால்கள் 40 ஆண்மைகள் நிறைந்த யானையின் தந்தத்தால் செய்யப்பட்டவை. அழகான வேலைப்பாடுகளுடன் அந்த கட்டில் செய்யப்பட்டு இருந்தது. இரட்டை இலை வேலைப்பாடுகள் அதில் செய்யப்பட்டிருந்தன.

## சேக்கை (மெத்தை)

அந்த மெத்தையில் முத்துச் சரங்கள் தொங்கின. மெல்லிய நூல்களில் கோர்க்கப்பட்டவை அந்த முத்துச் சரங்கள். படுக்கைக் கட்டிலின் தகட்டுத் தளத்தில் புலி உருவப் பூ வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அது புதையும் படி பல்வகை மயிர்களைத் திணித்து உருவாக்கப்பட்ட மெத்தை விரிக்கப்பட்டிருந்தது.

மெத்தையில் சிங்கம் வேட்டையாடுவது போலவும், முல்லைப்பூ பூத்திருப்பது போலவும் தையல் வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இப்படிப்பட்ட மெத்தை மேல் அரசி இருந்தாள்.

## மெத்தை மேல் மெத்தை \ சேக்கை

மெத்தையின் மேல் மற்றொரு மெத்தை சேர்க்கப்பட்டிருந்தது. மேல் மெத்தையில் அன்னத்தின் தூவிகள் திணிக்கப்பட்டிருந்தன. அதன் மேல் துணி விரிப்பு இருந்தது. அது கஞ்சி போட்டு செய்த சலவை - மடிப்பு விரித்த துணி

## அரசியின் கோலம் புனையா ஓவியம்

அரசி தனது முடியினை பின்னாமல் முன்புறமாக வளைத்துப் போட்டிருந்தாள். அவளது தலைவன் அப்போது அங்கு இல்லை சில முடிகள் நெற்றியில் பறந்துகொண்டிருந்தன. குழைகளை கழற்றி வைத்துவிட்டதால் வெறுங்காதுடன் காணப்பட்டாள். கையில் இருந்த பொன்வளையல்களை கழற்றி விட்டதால் வளையல் இருந்த அழுத்தம் தோளில் காணப்பட்டது.

முன்கையில் சங்கு வளையலும் - காப்புக்காகக் கட்டிய கயிறுகளும் மட்டும் இருந்தன.

வாளைமீன் வாய் போல் பிளந்திருக்கும் மோதிரத்தை விரல்களில் அணிந்திருந்தாள். நகை அணிகலன்களை மட்டும் அணிந்து இருந்தாள் பட்டுகொண்டையை உடுத்தாமல் சிவப்பு நிறத்தில் கொசுக்கு எரிந்து கொண்டிருந்தது.

மொத்தத்தில் புனையா ஓவியம் போல காணப்பட்டாள்

## அரசியின் கலக்கம்

பணிப்பெண்கள் அவளது காலடிகளைத் தடவிகொடுத்தனர் அந்த பணி பெண்கள் தளிர் போன்ற மேனி, அதில் சுணங்கு மடிப்பின் அழகு, மூங்கிலை வென்ற தோள், மெல்லிய இடை ஆகியவற்றைக் கொண்டு கட்டழகுடன் காணப்பட்டனர். அவர்கள் அரசிக்கு ஆறுதல் கூறினர் அவளின் நிலைகண்டு மிகவும் வேதனை கொண்டனர்.

அரசர் போரில் வென்று விரைவில் வந்துவிடுவார் என கூறினர்.

## தலைவிக்கு செவிலியர் ஆறுதல் கூறுதல்

பணிப்பெண்களுடன் ஆங்காங்கே நரைமுடி தோன்றும் கூந்தலை உடைய செவிலியர். ஆறுதல் கூறினர். உன் துணைவர் இப்பொழுதே வந்துவிடுவார் என்று அவளுக்கு விருப்பமான சொற்களைப் பேசினர். இவற்றை கூட அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை கலங்கினாள்.

## அரசியின் ஏக்கம்

அவளது படுக்கைக்குமேலே விதானம் அமைக்கப்பட்டு இருந்தது. அந்த மேல்கட்டியின் கால் முனை வரைவு வேலைப்பாடுகளைக் கொண்டிருந்தது.

மேல்கட்டித் துணியில் மெழுகு பூசப்பட்டு அதில் சந்திரன் உரோகிணி என்னும் பெண்ணை தழுவும் இவ்வடம் வரையப்பட்டு இருந்தது. அந்த இவ்வடத்தை பார்த்து அரசி பெருமூச்சி விட்டு கொண்டு இருந்தாள். அப்போது அவளது கடைக்கண்ணில் தோன்றிய கண்ணீர் துளியைத் தன் செவ்விய விரல்களால் துடைத்துக்கொண்டு இருந்தாள்

## பாசறை தொழில் முடிய வேண்டும்.

தலைவியின் தோழி தலைவிக்காக வேண்டிக்கொள்கிறாள் இந்த துன்பம் தரும் நிலை முடியவேண்டும். அந்த நிலை தீரவேண்டும். அதற்கு வழி அவளது தலைவன் போரில் வெற்றிபெற வேண்டும் போர் இப்போதே முடிய வேண்டும் என வேண்டிக்கொள்கிறாள்

## பாசறைத்தொழில்

யானை - தின்னி ஒளிரும் யானை இடை நெற்றியில் கொண்ட யானை, போர்த்தொழில் திறம் பெற்ற யானை தன் கையை போட்டுக்கொண்டு பிளிறும்படி

பெருஞ்செய் ஆடவர் - பெருஞ்செய் என்பது போர்க்களம் யானை நிலத்தில் இறப்படி போரிட்ட ஆடவர்கள். யானையை வீழ்த்திய ஆடவர் புண் பட்டு கிடப்பதை அரசன் காண வெளியே வந்தான்
வடக்கில் இருந்து காற்று வீசும்போதெல்லாம் பாண்டில் விளக்கில் எரியும் சுடர் தெற்கு பக்கமாக வீசியது. பேப்பந்தழை காப்புக்கொண்டே பின்னே சென்றான்

அரசன் போர்வீரர்களை கண்டான். முதுகில் மணி தொங்கும் பெண்- யானைகளை கண்டான் இருக்கை பருமன் களையாதபடி குதிரைகளைக் கண்டான். சேறு பட்டுக் கிடந்த தெருவில் நடந்து கண்டான்
விழும் பனித்துளியில் நனைந்துகொண்டே சென்று கண்டான். காற்றில் நழுவும் மேலாடையைத் தன் இடக்கையில் தழுவிக்கொண்டே சென்று கண்டான்

மெய்க்காப்பாளரின் தோளில் கையை வைத்துக்கொண்டு சென்று காண்பான். அது நள்ளிரவு நேரம் அவன் தன் படுக்கையில் இல்லை. சிலரோடு திரிந்துகொண்டு இருந்தான் அது அவன் பாசறைத்தொழில் உண்மையாக முற்றுப்பெற வேண்டும்

அரசியின் நினைவைத் துன்பம் தீர முற்றுப்பெறவேண்டும்.

தலைவி தன் தலைவன் தன்னை நினைக்கமாட்டானோ என வருந்துகிறாள்.

மகளிர் நிலை :-

வெண்ணிற சங்கினை அறுத்து செய்யப்பட்ட வளையல்களை அணிந்து இருந்தனர்.

மூங்கில் போன்ற மாவளப்பான தோள்களை உடைய மகளிர் இருந்தனர்.

முத்துப் போன்ற பல்வரிசைகளை கொண்ட மகளிர் அழகாக மெல்லிதாக சிரித்தனர்.

காதில் குழையினை அணிந்து இருந்தனர். காதின் குழைவரைக்கும் செல்லும் கண்களை கொண்டு இருந்தனர்.

மழை போன்ற ஈரமான கண்கள். இரக்கமான கண்களை கொண்டு இருந்தனர்

பிச்சு பூ மலர்வதை வைத்து வீட்டில் இருந்து கொண்டே மாலைபொழுது வருவதை அறிந்து கொண்டனர்.

வீட்டில் இரும்பால் செய்யப்பட்ட விளக்கினை ஏற்றி வைத்தனர் நெல்லும் மலரும் தூவி வழிபட்டனர்

மாடப்புறாக்களின் நிலை :-

வீட்டுப் புறாக்கள். இணை புறாக்கள், செங்கால் புறாக்கள் ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்தே மேயும் பழக்கம் கொண்ட புறாக்கள்.

மன்ற வெளிகளில் மேயும் புறாக்கள் குளிர் மிகுதியால் அவைகள் மேயவில்லை.

இரவிலும் பகலிலும் ஒன்றை ஒன்று பார்த்து கொண்டே மயங்கி கிடந்தன.

இடம் மாறி மாறி உட்காருகின்றன.

## காலத்திற்கு ஏற்ற மக்களின் நிலை :-

செல்வர் மாளிகை, பாதுகாப்பாளர் இருக்கும் மாளிகை அங்கு பணியாளர்கள் வெப்பம் தரும் மணக்கூட்டுப் பொருளை அரைக்கின்றனர்.

வடநாட்டு மக்கள் தந்த வட்டமான சந்தனக் கல்லும் தென்னாட்டுச் சந்தன கட்டையும் அரைக்கப்படாமல் தூங்குகின்றன

மகளிர் நிறைந்த பூக்கள் கொண்ட மாலைகளைத் தோளில் அணிந்துகொள்ள -வில்லை.

சிலவகையான பூக்களையே சூடிக்கொண்டனர். அதனைச் சூடிக்கொள்வதற்கு முன்பு தகரம் பூசி குளித்தனர்.

நெருப்பில் அகில் கட்டைத் துண்டுகளையும், வெண்ணிற அயிரையும் சேமபிராணியையும் , போட்டுப் புகைத்து உலர்த்திக்கொண்டனர்.

கைத்தொழில் கலைஞர்கள் தந்த வெண்ணிற விசிறி விரிக்கப்படாமல் சுருக்கி தொங்கவிடப்பட்டு இருந்தது.

மேல் மாடத்தில் காற்று வீசும் சன்னல்கள் திறக்கப்படாமல் அடைக்கப்பட்டு இருந்தன.

யாரும் கூடிய செம்பில் குளிர்ந்த நீரினை பருகவில்லை.
மாறாக அகன்ற வாயை உடைய தடவில் சுடச்சுட வெந்நீரைப் பருகினர்.

ஆடல் மகளிர்க்கு பாட்டு பாட வேண்டிய நிலை வந்தபோது யாழ் நரம்பு குளிர் ஏறிக் கிடந்ததால், அவற்றைச் தெய்த்து சூடேற்றிக் கொண்டு இருந்தனர்.